Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 15.4.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 15.4.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

நில அபகரிப்பில் இருந்து மக்களின் உரிமைகளை பாதுகாக்கவே, வஃக்பு திருத்த சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக, மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரன் ரிஜிஜு கூறி உள்ளார்.

வீட்டு மேற்கூரை சோலார் வசதிகள் மூலமான, நாட்டின் மின்சார உற்பத்தி திறன், அடுத்த நிதியாண்டில், 30 கிகாவாட் அளவில் அதிகரிக்கும் என ஆய்வறிக்கை ஒன்றில் தெரிய வந்துள்ளது.

குழந்தைக் கடத்தலை தடுக்கவும், இது தொடர்பான வழக்குகளை விரைந்து விசாரிக்கவும், உச்சநீதிமன்றம், கடுமையான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

புதுச்சேரியில், மீன்வள மேம்பாட்டிற்கான பிரதமரின் மத்ஸ்ய சம்பதா திட்டப் பணிகளை, மத்திய மீன்வளத் துறை இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் நாளை தொடக்கி வைக்கிறார்.

வஃக்பு ரிஜிஜு

நில அபகரிப்பை தடுத்து அனைத்து மக்களின் உரிமைகளை பாதுகாப்பதே அரசின் கொள்கை என்றும் இதன் ஒரு பகுதியாகவே, வஃக்பு திருத்த சட்டம் அமைந்து இருப்பதாகவும், மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரன் ரிஜிஜு கூறி உள்ளார். கேரள மாநிலம் கொச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வஃக்பு திருத்த சட்டம் எந்த ஒரு சமூகத்திற்கும் எதிரானது அல்ல என்றும் பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் இந்த சட்டத்தை ஆதரிப்பதாகவும் கூறினார். கேரள மாநிலம் முனம்பம் பகுதியில் 600-க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ மீனவர்களுக்கு சொந்தமான நிலம், ஒருதரப்பான முறையில் வஃக்பு சொத்தாக அறிவிக்கப்படுவதை அரசு அனுமதிக்காது என்றும் அவர் தெரிவித்தார். திரு கிரண் ரிஜிஜு இன்று முனம்பம் கடலோர கிராமத்திற்கு நேரில் சென்று அங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மோடிக்கு நன்றி நிகழ்ச்சியிலும் கலந்து கொள்கிறார்.

வஃக்பு சேர்க்கை

இதற்கிடையே மேற்கு வங்கத்தில், வஃக்பு திருத்த சட்டத்திற்கு எதிரான போராட்டங்கள் வன்முறையாக மாறியதால் பாதிக்கப்பட்ட மூர்ஷிதாபாத் பகுதியில், இயல்பு நிலை மெதுவாக திரும்பி வருகிறது. போலீசாரும், மத்திய படையினர் மற்றும் விரைவு செயல்பாட்டு படையினரும், பதற்றமான இடங்களில், ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு

வருகின்றனர். மூர்ஷிதாபாத்தில் சென்ற வாரம் இருவர் கொல்லப்பட்டது தொடர்பாக 2 நபர்களை போலீசார் கைது செய்துள்ளனர். இதையும் சேர்த்து வன்முறைகள் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 223-ஆக அதிகரித்துள்ளது. வதந்திகள் பரவாமல் தடுக்கும் வகையில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட சமூக ஊடக கணக்குகளையும் நிர்வாகம் முடக்கி வைத்துள்ளது.

*சூரிய விசை*

தூய எரிசக்திக்கு மாறுவதற்கான இந்தியாவின் செயல் திட்டத்தில் முக்கிய தூணாக சூரிய விசை மாறிவரும் நிலையில், வீட்டு மேற்கூரை சோலார் வசதிகள் மூலமான நாட்டின் மின்சார உற்பத்தி திறன் அடுத்த நிதியாண்டில், 25 முதல் 30 கிகாவாட் அளவில் கணிசமாக அதிகரிக்கும் என CareEdge நிறுவனத்தின் அறிக்கையில் தெரிய வந்துள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்……

(வாய்ஸ்)

*சூரிய விசை-2*

(வாய்ஸ்)

சூரிய சக்தி மூலமான நாட்டின் மொத்த மின்சார உற்பத்தி திறனை, 2030-ஆம் ஆண்டிற்குள் 300 கிகாவாட்டாக உயர்த்தும் இலக்கை எட்டுவதில் மேற்கூரை சோலார் வசதிகள் முக்கிய பங்காற்றும் என்றும்

CareEdge அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேற்கூரை சோலார் மின் உற்பத்தி வசதிகளை நிறுவ, உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை அரசு வழங்கி வருவதும் தொழில் நுட்ப வளர்ச்சியினால் செலவு குறைந்து வருவதும் இதற்கான முக்கிய காரணங்களாக திகழும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

நாடு முழுவதும் 1 கோடி வீடுகளில், மேற்கூரை சோலார் மின் உற்பத்தி வசதிகளை நிறுவும் இலக்குடன், மத்திய அரசு அமல்படுத்தி வரும், பிரதமரின் சூரிய வீடு-இலவச மின்சார திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு 78 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

குழந்தை கடத்தல்

நாட்டில் குழந்தைக் கடத்தலை தடுக்கவும், குழந்தைக் கடத்தல் தொடர்பான வழக்குகளை விரைந்து விசாரித்து முடிக்கவும், உச்சநீதிமன்றம், கடுமையான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. உத்தரபிரதேசத்தில் குழந்தை கடத்தல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரின் முன்ஜாமீன் மனு மீதான விசாரணைகளின் போது நீதிபதிகள் திரு பர்திவாலா, திரு மகாதேவன் ஆகியோர் அடங்கிய

அமர்வு இந்த வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டது. இதுபற்றிய கூடுதல் விவரங்கள்..................

(வாய்ஸ்)

*குழந்தை கடத்தல்-2*

(வாய்ஸ்)

குழந்தைக் கடத்தல் தொடர்பான வழக்குகளை, 6 மாதங்களுக்குள் விசாரித்து முடிக்க, உயர்நீதி மன்றங்கள், கீழ் நீதிமன்றங்களுக்கு உத்தரவிட வேண்டும் என, உச்சநீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது. நீதி தாமதமாவதை தவிர்க்கும் வகையில், இத்தகைய வழக்குகளை, அன்றாட அடிப்படையில் விசாரிக்க வேண்டுமென்றும், இந்த உத்தரவை அமல்படுத்துவதில் தொய்வு இருந்தால், நீதிமன்ற அவமதிப்பாக கருதப்படும் என்றும் உச்சநீதிமன்றம் கூறி உள்ளது. புதிதாக பிறந்த குழந்தை, மருத்துவமனையில் இருந்து திருடப்பட்டால், சம்பந்தப்பட்ட மருத்துவமனையின் உரிமத்தை ரத்து செய்வதே, முதல் நடவடிக்கையாக இருக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறி உள்ளது. குழந்தை கடத்தல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு, அலகாபாத் உயர்நீதி மன்றத்தால் ஜாமீன் அனுமதி வழங்கப்பட்டதையும் உச்சநீதிமன்றம் குறை கூறி உள்ளது.

*ஹஜ் கோட்டா*

இவ்வாண்டு, இந்தியாவிற்கான ஹஜ் பயணக் கோட்டா, 1 லட்சத்து 75 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை, 1 லட்சத்து 36 ஆயிரமாக இருந்தது. இவ்வாண்டு பிரதானக் கோட்டாவின் கீழ் 1 லட்சத்து 22 ஆயிரம் பேரின் ஹஜ் பயணத்திற்கான ஏற்பாடுகளை இந்திய ஹஜ் கமிட்டி மூலம், மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது. விமான பயணம், உள்ளூர் பயணம் தங்குமிடம் மற்றும் இதர சேவைகளுக்கான முன்னேற்பாடுகள், சவுதி அரேபியாவின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்ப, ஏற்கனவே செய்து முடிக்கப் பட்டுள்ளதாகவும், எஞ்சிய கோட்டா, வழக்கம் போல், தனியார் பயண ஏற்பாட்டாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி-மீன்வளம்*

புதுச்சேரியில், மீன்வள மேம்பாட்டிற்கான பிரதமரின் மத்ஸ்ய சம்பதா திட்டப் பணிகளை, மத்திய மீன்வளத் துறை இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் நாளை தொடக்கி வைத்து, மீனவப் பயனாளிகளுக்கு, நிதி உதவிக்கான ஆணைகளை வழங்குகிறார். காமராஜர் மணி மண்டபத்தில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தலைமையில் முதலமைச்சர் திரு ரங்கசாமி முன்னிலையில் நடைபெறும் இவ்விழாவில் சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மாநில மீன்வளத் துறை

அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் மற்றும் இதர அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர்நிலை அதிகாரிகளும் பங்கேற்க உள்ளனர்.

புதுச்சேரியில் நாளை தொடக்கி வைக்கப்படும் மத்ஸ்ய சம்பதா திட்டப் பணிகளில், கடலில் 10 இடங்களில் செயற்கைப் பாறைகளை நிறுவுதல், நரம்பையில், பருவநிலை மாற்றங்களுக்கு ஏற்ற கரையோர கிராமம் நிறுவுதல், மூர்த்திகுப்பம்-புதுக்குப்பத்தில், துணை மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான ஆய்வுகள் குறித்து சென்னை ஐஐடி-உயர்கல்வி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகிய பணிகளும் அடங்கும். மத்திய இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் நாளை மாலை காரைக்கால் என்ஐடி உயர்கல்வி நிறுவனத்தில் மீன்வளத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியிலும் கலந்து கொள்கிறார்.

*தொழிலாளர் துறை*

புதுச்சேரியில், தொழிற்சாலைகள் மற்றும் கொதி கலன்களுக்கான தலைமை ஆய்வாளர் அலுவலம் சார்பில், தொழிலாளர் துறை அலுவல வளாகத்தில் இன்று மாலை நடைபெற்ற, 54-ஆவது தேசிய பாதுகாப்பு வார விழாவின் நிறைவு விழாவில், சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் கலந்து கொண்டு, பாதுகாப்பு தினப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசுகளை வழங்கி

சிறப்பித்தார். அரசுக் கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், தொழிலாளர் துறை செயலர் திரு ஜெயந்தகுமார் ரே உள்ளிட்டவர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி-ஓய்வூதியம்*

புதுச்சேரி, காரைக்கால், ஏனாம், மாகே பகுதிகளைச் சேர்ந்த ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள், 2025-26-ஆம் ஆண்டிற்கான ஆயுள் சான்றிதழை, தத்தம் பகுதிகளில் உள்ள அரசுக் கருவூலம் அல்லது துணைக் கருவூலத்தில் நேரிலோ அல்லது ஆன்-லைன் முறையிலோ சமர்ப்பிக்க வேண்டுமென, புதுச்சேரி அரசின் கணக்கு மற்றும் கருவூலத்துறை அறிவித்தள்ளது. மத்திய அரசின் ஜீவன் பிரமாண் இணைய தளம் அல்லது வீட்டிற்கே வந்து அஞ்சல் துறை வழங்கும் சேவையை இதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் மே 2 முதல், மே 30-ஆம் தேதிக்குள். ஆயுள் சான்றிதழ் சமர்ப்பிக்க தவறினால், மேற்கொண்டு ஓய்வூதியம் வழங்கப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*ஹால் டிக்கட்*

புதுச்சேரி அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையில் உதவியாளர் பணியிடங்களுக்கான முதல் நிலை தேர்வு, வரும் 27-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை, புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் மற்றும் மாகே பகுதிகளில் நடைபெற உள்ளது. தேர்வர்கள் தங்களுக்கான அனுமதி

சீட்டை, புதுச்சேரி அரசின் அதிகாரப்பூர்வ இணைய தளத்தில் இருந்து, நாளை முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் ஏதேனும் உதவி அல்லது விவரங்கள் தேவைப்பட்டால், வேலை நாட்களில், 0413-22 33 338 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*ஜிப்மர்*

புதுச்சேரி ஜிப்மரில், ஸ்வச்சதா இருவார விழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகள் மற்றும் ஊழியர்களுக்கு, ஜிப்மர் இயக்குநர் திரு வீர்சிங் நேகி இன்று நடைபெற்ற நிறைவு விழாவில் பரிசுகளை வழங்கினார். திடக் கழிவு மேலாண்மை குறித்து ஜிப்மர் ஊழியர்கள் தயாரித்துள்ள, விழிப்புணர்வு வீடியோ படத்தையும் அவர் வெளியிட்டார். முன்னதாக, தூய்மை பற்றிய பள்ளி மாணவர்களின் விழிப்புணர்வு பேரணியை, ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் துரைராஜன் தொடக்கி வைத்தார். ஸ்வச்சத்தா இருவார விழாவை முன்னிட்டு ஜிப்மர் வளாகத்தில் பெரிய அளவிலான தூய்மைப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

*புதுச்சேரி-பல்கலைக்கழகம்*

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில், தமிழ்நாடு வித்யா பாரதி உயர் கல்வி அமைப்புடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, பாரதியின்

ஞான பரம்பரா சொற்பொழிவுத் தொடர் வெற்றிகரமாக தொடக்கி வைக்கப்பட்டது. துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு விழாவிற்கு தலைமையேற்றுப் பேசுகையில் இந்தியாவின் பாரம்பரிய ஞானம், இன்றைய உலகிற்கும் பொருந்துவதை எடுத்துக் கூறினார். தேசிய கல்விக் கொள்கையின் நோக்கங்களுக்கு ஏற்ப, இந்தியாவின் பாரம்பரிய ஞானத்தை நவீன கல்வி, ஆராய்ச்சி, மற்றும், தார்மீக மாண்புகளுடன் ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். இந்திய பாரம்பரிய ஞானத்தின் ஆழம் மற்றும் பன்முகத் தன்மை குறித்து, தத்துவ ஆராய்ச்சிக்கான இந்திய கழகத்தின் உறுப்பினர் டாக்டர் சம்பத் குமார் சிறப்புரையாற்றினார்.

*ஐபிஎல்*

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு, சண்டிகரில் நடைபெற உள்ள போட்டியில், பஞ்சாப்-கொல்கத்தா அணிகள் மோதுகின்றன. நேற்று இரவு லக்னோவில் நடைபெற்ற போட்டியில், சென்னை அணி, 5 விக்கெட் வித்தியாசத்தில், லக்னோ அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

*வானிலை*

மன்னார் வளைகுடா மற்றும் தென்மேற்கு வங்க கடல் பகுதிகளில், வளிமண்டல கீழடுக்கு சுழற்சிகளும், தென்னிந்தியப் பகுதிகளின் மேல்

வளிமண்டலத்தின் கீழடுக்கில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதியும் நிலவுவதால், வரும் 21-ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது. இன்றும், நாளையும் அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றங்களுக்கு வாய்ப்பு குறைவு தான் என்றாலும், வரும் 17 முதல் 19-ஆம் தேதி வரை வெப்ப நிலை ஓரிரு இடங்களில், 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பருவ மழை* (9)

இவ்வாண்டு ஜுன் முதல் செப்டம்பர் வரையிலான தென்மேற்கு பருவமழைக் காலத்தில், மழை பொழிவு பெரும்பாலும் இயல்பை விட அதிகமாகவே இருக்க கூடும் என இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. ஆயினும் வடகிழக்கு, வடமேற்கு மற்றும் தீபகற்ப இந்தியாவின் சில பகுதிகளில் இயல்பை விட குறைவாக மழை பொழிவு இருக்கலாம் என்று இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தலைமை இயக்குநர் டாக்டர் எம் மகோபாத்ரா இன்று புதுடெல்லியில் செய்தியாளரிடம் தெரிவித்தார். நடுநிலையான எல்-நினோ விளைவுகள் பருவமழைக் காலத்திலும் தொடரக் கூடும் என அவர் மேலும் கூறினார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நில அபகரிப்பில் இருந்து மக்களின் உரிமைகளை பாதுகாக்கவே, வஃக்பு திருத்த சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக, மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரன் ரிஜிஜு கூறி உள்ளார்.

வீட்டு மேற்கூரை சோலார் வசதிகள் மூலமான, நாட்டின் மின்சார உற்பத்தி திறன், அடுத்த நிதியாண்டில், 30 கிகாவாட் அளவில் அதிகரிக்கும் என ஆய்வறிக்கை ஒன்றில் தெரிய வந்துள்ளது.

குழந்தைக் கடத்தலை தடுக்கவும், இது தொடர்பான வழக்குகளை விரைந்து விசாரிக்கவும், உச்சநீதிமன்றம், கடுமையான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

புதுச்சேரியில், மீன்வள மேம்பாட்டிற்கான பிரதமரின் மத்ஸ்ய சம்பதா திட்டப் பணிகளை, மத்திய மீன்வளத் துறை இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் நாளை தொடக்கி வைக்கிறார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 15.4.2025/Script.

----------------